Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 | of 1953,

விரோதிஞு (1839) ஆவணி 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு புரட்டாதிமீ ருஉ வெள்ளிக்கிழமை (21 September. 1962) [இல-உச]

உலகியல் அலை

# இறக்குமதி வரி உயர்த்துவது-

## குறைக்குரக்கன் திரிக்கிறதற்கா?

## வேலையில்லாக் கவலைக்குமேல் வாழ்க்கைச்செலவு உயர்வு

வரவுக்கு மிஞ்சிய செலவுத் திட்டம் இயற்றும் நிபுணர்கள் இலங்கை நிதிமந்திரிகள் என்ற பெயர் எங்கள் நாடு பெற்றதே பெரும் பாக்கியம். கணக்கிட்டு முடிவு காணுத வரவு செலவுத் திட்டம் காட்டுவதிலும் — எங்கள் ஆட்சியாளர் திறமையாளர்கள். இதற்கிடையில் இறக்குமதித் தீர்வையை உயர்த்திவிட்டால் நிலைமை மாறிவிடும்என்று நிதிமந்திரி நினைத்துவிட்டார்!

வெளி நாட்டிலிருந்து இங்கு வரும் பல் பொருட்கள் இனிமேல் வரவழைக்கப்படமாட்டா. காரணம் இறக்குமதித்தீர்வை யுயர்வு. இதன் பயனுக நாட்டின் பொருளாதார நிலைமையில் என்ன மாற்றம் உண்டாகும் என்பதைப் பற்றிப் பாராளுமன்றத்து மக்கள் சபையிலே எதிர்க்கட்சியினர் எடுத்து விளக்கப்படுத்தியும் அரசினர் மூளைக்குள் ஒன்றும் நுழைந்ததாகத் தெரியவில்லை.

வாழ்க்கைச்செலவு பாய்ந்து பெருகி வருகின்ற வேளையில் வாழ்க்கைக்கு வேண்டியனவற்றுக்கு மேலதிகமான விலைகொடுப்பதென்றால் வாழ்க்கையைத் தாழ்த்திவிடுவதாய் முடியுமல்லவா? மந்திரமறியாதவன் பூசைபோல நிதி சேர்க்கும் நெறியறியாத மந்திரிகளின் ஆலோசனைகள் ஆபத்தையே விளைவிக்கும். நெருக்கடி தீராத நேரத்திலும் அரிசி அளவு வெட்டுக் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டியதென்றும் மக்கள் அதைப் பற்றி மாறுபடச் சொல்லவில்லை என்றும் மனத்தைத் தேற்றும் ஆளுங் கட்சியினரின் தாளமும் அடிக்கடி கேட்கின்றது வழி காண முடியாதவர்கள் விலகி மற்றையோரை வழி நடத்த விட்டால் என்ன?

—0—

## நற் சிந்தனை

அஃகுத லில்லா
அறிவினை யுடையவன்
நக்கும் நம்வஞ்ச
வேடங் கண்டே

## சிவதொண்டன் யாத்திரை வழிபாடு

ஞான நலமோங்கவும் நான்மறையாகம நெறி சிறக்கவும் புரட்டாதி மாதம் 23-9-62-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை துவங்கிவரும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் தெய்வ வழிபாட்டு யாத்திரை செய்துவரச் சிவதொண்டன் நிலையத்தார் தீர்மானித்துள்ளனர். அன்பர்கள் யாவரும் பங்குபற்ற வேண்டுமென்பது அவர்கள் வேண்டுகோளாகும்,

முதலாம்யாத்திரை அன்று காலை 9 மணிக்கு கைதடி தெற்கு விநாயகப்பெருமான் ஆலயத்தில் கூடி மாலை 3 மணிக்குப்புறப்படும் அடுத்த யாத்திரை 30-9-62 ஞாயிற்றுக்கிழமை சுன்னுகம் சிவன் கோவிலிலிருந்து அவ்வாறே புறப்படும். ——

## செய்திக்குட்செய்தி

பிரதமர் சிறிமாவோ தமக்கு ஊர்வலம் வேண்டாம் என்று பிரமாதமாகச் சொல்லிவிட்டார், பொருளாதார நெருக்கடியைக் கண்டிக்கும் ஊர்வலங்கள் வெளிக்கொள்ளாமல் இருப்பதற்கு இது ஒரு அடியா?

x x x

ஆறு பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் அந்நிய நாட்டுச் சுற்றுப் படணஞ் செய்ய இருக்கின்ருர்களாம். பாராளுமன்றததினர் என்ருற் பாராத நாடுகள் இருக்கப்படாதே. பாராடி வந்துவிட்டால் வாக்காளர்களுக்கு பணியாற்றியதற்குச் சரிதானே.

x x x

பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் அரசியல் பரவவிடப்படாது என்று பிரதமர் புத்திமதி கூறியிருக்கிருராம்; இந்த நாட்களில் இயங்கும் அரசியல் எந்த இடத்திலுமே பரவக்கூடாதென்பதுண்மையே.

உ

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையரிந்ததன்மைதோன்றும்
மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தருேன்றந்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்தருேன்றும்
பொன்னனையதிருமேனிபோலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே.

x x x

ஊனுசியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருனுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானுன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## போதும்போதும் உன் பாததரிசனம்

★

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: பைரவி :: தாளம்: ஆதி

பல்லவி

போதும் போதுமுன் பாத தரிசனம்
பொன்னம் பலத் துரையே! — எப் (போ)

அநுபல்லவி

வேதம் போதிக்கும் விருந்துமுக் கனியே
விரும்பியுண் பார்க்கினிக்கும் விளைந்தசர்க் கரையே.

சரணம்

சங்கத் தமிழ்சுரந்த தந்திமுகனுங் கந்த
சாமியும் அண்டமெல்லாம் தண்ணருள் செய்யத்தந்த
சங்கரனே உன்பாதந் தன்னிலே அன்பருந்த
சாவுடல் பிரியுமந்தத் தருணம்வரினும் அந்தப் (போ.)

## காளிதாசர் புத்தகக் கண்காட்சி

——:0:——

12-9-62 அன்று வடஇலங்கை சம்ஸ்கிருத சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை 23-9-62 அன்று பத்திரங்களும் பரிசுகளும் வழங்குவதற்கு ஒருகூட்டம் கூடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அத்தருணம் சங்கத்தலைவர் தி. கி சீதாராம சாஸ்திரிகள் தலைமைதாங்குவார்கள், பரிசுகளும் பத்திரங்களும் (பாரதிய வித்தியாபவன் பரீட்சைகள், பம்பாய் அமர பாரதி பரீட்சைகள் சென்னை) திரு. கி. பீ ஹரன் வழங்குவார் திருவாட்டி ச. அமிர்தாம்பிகை B. A., Hons, சொற்பொழிவு ஆற்றுவார். இடம்: நாவலர் வித்தியாசாலை; காலம்: 23-9-62 பிற்பகல் 4 மணி.

14-10-62 அளவில் காளிதாசர் விழாவும் நடத்த இச்சங்கம் தீர்மானித்துள்ளது. காளிதாசரின் புத்தகக்காட்சியும் இசை விருந்து முதலியனவும் இவ்விழாவில் இடம்பெற இருக்கின்றன. இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து பேச்சாளரை ஒழுங்குபண்ண வேண்டுமென்றும் நிர்வாகசபை எண்ணியுள்ளது.

29-9-62, 30-9-62 ஆகிய நாட்களில் நாவலர் வித்தியாசாலையில் பாரதீய வித்திய பவனத்தின் (பம்பாய்) பரீட்சைகளை நடத்துவதற்கான ஆயத்தங்களும் செய்யப்பட்டன. ——

## அருணந்தி சிவாசாரியார் குருபூசை

நாள்: சுபகிருதுஞு புரட்டாதி கக உ (27 - 9 - 62) வியாழக்கிழமை.

இடம்: யாழ்ப்பாணம்,
சைவ பரிபாலன சபை
நாவலர் மண்டபம்

நிகழ்ச்சிகள்:
கடவுளாராதனை.

ஆரம்பம்: இரவு 7 மணி
தமிழ்மறையோதல்
ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள்

விரிவுரை;
அருணந்திசிவாசாரியார்
திரு. வே. சோமசுந்தரம் அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம். 21-9-62.

# 'வேலும் வில்லும்'

——0——

### (விமர்சனம்)

[இந்துசாதனம் நடாத்திய சேதுப்பிள்ளை கட்டுரைப் போட்டியில் மாணவர் பகுதியில் முதல் பரிசைப்பெற்ற கட்டுரை முன்னர் வெளிவந்தது இது மறுபிரிவில் முதற்பரிசு பெறும் கட்டுரை]

முற்றொடர்—2

அடுத்தபடியாக கந்தர் அலங்காரம் என்னும் நூல்பற்றிச் சிறந்த விளக்கம் தருகின்ருர். அலங்காரம் என்ருல் எல்லோருக்கும் ஆனந்தம். அன்பின் வழியே நிகழும் அலங்காரமே சிறந்த இன்பம் தருகின்றது. குழந்தையை அலங்கரித்து இன்புறுவாள் தாய், காதலியை அலங்கரித்துக் காண்பான் காதலன். கவிதையை அலங்கரித்துக் காண்பான் கவிஞன். ஆண்டவனை அலங்கரித்து ஆனந்தக் கூத்தாடுவான் பக்தன் என்று இன்னோரன்ன வகையிலே அலங்காரத்தின் பொருளை பசுமரத்தாணிபோல நயம்பட விளக்குகின்ருர். அது திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் முருகனைக் குறித்து அருணகிரிநாதரால் பாடப்பட்டது.

சீரிளமைத் திறம் குன்ருத அழகன் முருகன். அவன் அழகை இருகண்களால் முகர்ந்து பருக முடியாமல் அலமருகின்ருர் அருணகிரியார்.

பேரழகைக்காணும் அன்பர்கள் இவ்வாறு பேதுறுவது இயல்பு என்பதனைக் கவியரசர் கம்பரும், சேக்கிழாரும் நன்கு எடுத்து விளக்கியுள்

### திரு. வ கந்தசாமி அவர்கள்

ளார்கள் எனப் பேராசிரியர் சிறந்த முறையில் விளக்கந் தருகின்ருர்.

அதாவது மணிவண்ணனுகிய இராமன் மிதிலை நோக்கிச் செல்கின்ருன். [illegible] னுகிய இராமனைச் சீதை [illegible] படிக் காணப்போகின்ருள் என்று சிந்தித்து நின்ருர் சிலர். ஆயிரங்கண் இருந்தாலன்றி அஞ்சன மேனியானை முற்றும் அறிய முடியாது என்று கருதினுள் ஒரு மங்கை "நம்பியைக்காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்" என்று அக்கருத்தைப் பாடுகின்ருர் கம்பர்,

இவ்வாருன மேற்கோளை எடுத்துக்காட்டி அலங்காரத்தின் மாண்பினை வியக்குகின்ருர்.

[illegible] கண்டு தொழுவதற்கு நான்முகனுகிய பிரமன் தன் ஒரு முகத்தை ஆயிரம் ஆகக் கணக்கிட்டு நாலாயிரம் கண் படைக்கவில்லையே என்று வருந்துகின்ருர் அருணகிரிநாதர்,

"கருமான் மருகனைச் செம்மான்
மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக்
கோளனை வானமுய்யப்
பெருமா வினைச்செற்ற
போர்வேலனைக் கன்னிப்பூக
தருமா மருவுசெங் [முடன்
கோடனை வாழ்த்துகை
சால நன்றே"

என்பது ஓர் அலங்காரப் பாட்டு. இப்பாட்டில் சாதிப்

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங் [குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஹு புரட்டாதி மீ
ரு உ வெள்ளிக்கிழமை

## இசைப்பயன் எங்கே?

முத்தமிழ்க் கலை மன்றங்கள் நாடெங்கணும் முழக்கஞ் செய்கின்றன; நாளொருவண்ணம் பொழுதொரு சாயலாய் வளர்ந்து வருகின்றன. இவற்றால் இயற்பயன் எங்கே? இசைப் பயன் எங்கே? நாடகப் பயன் எங்கே?

காலப்போக்கினுற் பழமையினின்றும் பெரிதும் விலகிப் புதுமை மயமாகி விட்டன இயல் இசை நாடகம் என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள். விளையும் பயனும் அவ்வாறே என்று கூறின் மிகையாகுமா?

பழந்தமிழ் நூல்களுக்கும் இன்று பொலிந்து மலிந்து வெளி வரும் புதுமை வெளியீடுகளுக்குமிடையே யுள்ள நெடுவெளியை நோக்கும் பொழுது மாற்றத்தின் விபரீதம் தெற்றெனப் புலப்படுகின்றது.

கலை என்ற பெயரிலே தமிழ்ச் சால்பின் நிலைமை இந்நாளில் நனிதிரிந்துவிட்டது. மனிதன் மனத்தைப் புனிதமாக்கும்மரபில் இயல் இசை நாடகம் முன்னாளிற் போன்று இன்று பண்புடைய பயனைக் கொடுக்கும் பான்மையில் அத்துறைகளில் ஈடுபடுகின்றவர்கள் பணி யாற்றுகின்றார்களா?

இசையை எடுத்துக்கூறும் பொழுது "கேட்கில் இன்பஞ் செவிக்குத் தருவன சிநதைக் குரியன"வாயமை தலை நெறி. திருமுறைகள் இன்று நிலவும் இசை எழுச்சியில் எத்தகைய இடத்தைப் பெற்றிருக்கின்றன; ஒலிபெருக்கிகள் நாலு பக்கங்களிலும் ஓலமிட்டுக் கொண்டிருக்கின்றனவே யன்றி, ஏழிசைப்பயனும் இன்பத்தை அளிக்கின்றனவல்ல. இசைத்தட்டுகளும் ஒலிபெருக்கிகளும் இன்றியமையாதனவாய் இருக்கும் இக்காலத்தில் பாட்டுப்படும்பாடு பகருந் தரத்ததோ! மணப்பந்தலிலே மணமகன் மணவினை இயற்றும் மங்கலப் பொழுதில் "ஏன் பிறந்தாய் மகனே" என்று அவனையே முன்னிலைப்படுத்தி உள்ளத்தில் ஏக்கத்தை உண்டு பண்ணும் இசை நிகழ்ச்சிகளைப்பற்றி கலைஞர்களும் கலை நிலையங்களும் கவலைப் படுவதாய்க் காணவில்லை. ஆலயங்களில் அலங்கார விழாக் காலங்களிலும் கொடியேறி நடக்கும் பெருவிழா நேரங்களிலும் ஒலிபெருக்கிகள் அடியார்கள் அகத்தில் இடி இடிக்கும் தன்மையாக முழக்கஞ் செய்வதைத் தடுகக முயல்வார் முத்தமிழ்க் கழகத்தாரில்லையே. தமிழோடிசை பாடல் மறந்துவிட்ட நிலைமை உண்டானதைப்பற்றிச் சைவ சங்கங்கள் இனிமேலாயினும் எண்ணவேண்டாமா? திருமுறைகளை உரிய நெறியிற் பண்ணுடன் பாடும் நிகழ்ச்சிகளைத் திருக்கோயில்களிலும் மங்கல வைபவங்களிலும் கலை விழாக்களிலும் [illegible] சைவ அன்பர்கள் தொண்டாற்றுதல் வேண்டும்.

—0—

# நான் யார்?

[பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

நான் யார்? என்றவினு உலகந் தோன்றிய காலந் தொடங்கி இருந்து வருகிறது. அதற்கு விடை காணும் முயற்சியும் நடந்து வருகிறது.

நான் யார்? என்ற வினுவுக்கு எளிதில் விடைகண்டு சொன்னவன் உலகாயதன். இந்த உடம்புதான் நான் என்று தீர்மானஞ் செய்தவன் அவன்.

நான் யார்? என்ற வினுவுக்கு அரிதின் முயன்று வேத உபநிடதங்களை ஆராய்ந்து விடைகண்டு சொன்னவன் வேதாந்தி.

காணப்பட்ட இந்த உலகம் தோன்றி நின்று ஒடுங்குவதற்குத் தாரகமாய், அதனோடு அத்துவிதப்பட்டு நின்றது எதுவோ அதுவே பிரமம். அந்தப் பிரமந்தான் நமது இருதய குகைக்குள் 'நான்' 'நான்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆகவே 'நான் பிரமம்' என்று முடிபு செய்தவன் அந்தவேதாந்தி.

உலகாயதன் வேதாந்தி ஆகிய இருவருஞ் சொன்ன விடைகளைக் கேளாமலே கேட்டுக்கொண்டு, அவர்களைப் பாராமலே பார்த்துக் கொண்டு அவர்கள் எதிரில் எழுந்தருளியிருக்கின்றார் மௌனதவமுனிவர்ஒருவர். பயனில் சொற் பயிலாதவர் அவர்.

எதிரிலிருந்த ஏனையவர்கள் மௌன தவமுனிவர் முகத்தை நோக்குகின்றார்கள். அவருடை முகாரவிந்தம் மெல்ல மெல்ல இதழ் அவிழுகின்றது.

இருவர் கூற்றும்
பொய்

என்கின்றது, அம்முனிவருடைய திருவாய் மலர்.

எங்கும் நிசப்தம் குடிகொள்ளுகின்றது. அதே சமயம் ஒருவகை ஏக்கம் தலை நிமிர்கின்றது.

உலகாயதம் பொய்யாய்ப் போய்த் தொலையட்டும். வேதாந்தமுமா,

பொய்

என்ற வினு எழுகின்றது.

தவ முனிவர் சற்றேனுந் தயங்காது தமது நாவைச் சற்றே பெயர்த்து,

'புரை தீர்ந்த'

என்று கூறி அமைகின்றார்.

வேதாந்தம் 'நான் பிரமம்' என்பது "புரைதீர்ந்த பொய்" என்றது ஆழ்ந்த சிந்தனைக்குரிய அருங் கருத்து.

"பொய்ம்மையும் வாய்மை
யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்",

உபநிடத முனிவர்கள் சார்ந்ததன் வண்ணமாகும் ஆன்மாவை உலகாயதன் முடித்துக் கட்டிய இந்த உடம்பின் வேறாகக் காணுதற்கு வழி வகுத்திருக்கின்றார்கள். முனிவர்கள் வழிபிற் செல்லுஞ் சீடன், உடம்பைப் பொய்ச் சார்பு என விடுத்து, மெய்ச்சார்பை உணர்ந்து, மெய்ச் சார்பாகிய பிரமமாகத் தன்னைக் காணுகின்றான். ஒருநாள் நான் உடம்பு என்றவன், மற்றொருநாள் நான் பிரமம என்பான். அவ்வளவில் முனிவர் உபநிடத பாடத்தை முடித்து ஆசி வழங்கி மகிழுகின்றார்.
அப்பால்,
சாதகனுகிய மாணவனுக்கு,

'கண்ட இவை
அல்லேன் நான்'
'காணுக் கழிபரமும்
நான் அல்லேன்'

என்பதாகிய சிவஞானம் சித்திக்கின்றது.

மேற்காட்டிய தொடர்கள் சிவஞானசித்தியார் ஒன்பதாஞ் சூத்திரம் ஏழாஞ் செய்யுளில் முதற்கண் உள்ளவை.

கண்ட இவை - காணப்பட்ட தேகாதிப் பிரபஞ்சங்கள்.

காணுக் கழிபரம் - கருவி கரணங்களுக்கு எட்டாத பிரமம்.

யோகிகள் கருவி கரணங்களை விலகாமல் விலகி நின்று, அவைகளுக்கு எட்டாதவைகளை உணருகின்றார்கள். தேகச் சார்பை விலகாமல் விலகிப் பிரமத்தைச் சார்ந்து நான் பிரமம் என்று காணுவது ஒருவகை யோகநிலை.

இந்த யோக நிலையை உற்றவர்கள்,
'நான் சரீரம்' என்பது எத்துணைப் பொய்யோ, அத்துணைப்பொய் 'நான் பிரமம்' என்பதும் என்றுணர்ந்து,

சிவஞானம் சித்திக்கப் பெற்று, அச்சிவஞான போதத்தால்,

சிவத்தின் உண்மையியல்பையும், அச்சிவத்தின் வேறாக எண்ணமுடியாத சிவமயமான தம் உண்மையியல்பையும் உணராதே உணர்ந்து, 'நான் அது' என்ற பேதம் தோன்றாதே [illegible]வர்கள்.

இஃது ஏகபாவம் எனப்படும் வேதாந்தத் தெளிவாம். சைவசித்தாந்த முத்திநிலை. இந்நிலையோடு ஒப்பிடும் போது 'நான் பிரமம்' என்கின்ற யோகநிலை பொய் ஆனுல், மெய்ந்நிலைக்கு அது சாதகம். அதனுல் அந்தப் பொய் புரைதீர்ந்த பொய். புரை - குற்றம்.

'காதலினல் நான் பிரமம்
என்னும் ஞானம் கருது
பசு ஞானம்' என்பது சிவ
ஞான சித்தியார்,

ஞானம் மூன்றுவகை. அவை பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்பன. முறையே ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்தது. பதிஞானம் — சிவஞானம் எனப்படும். சிவஞானமாவது திருவருள். 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற திருவாசகம் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

மூவகை ஞானங்களும் 'நான்யார்?' என்ற வினுவை விடுவித்தற்கு உபகாரமானவைகள். பதிஞானமாகிய சிவ ஞானத்தினுலே தான் - நான் — என்பதன் உண்மை இயல்பு சித்திக்கும் என்பது காட்டப்பட்டது.

பசுஞானத்தினுலே நான் பிரமம் என்ற உணர்வு பிறக்கும். அதனுல் நான் என்பதன் உண்மை இயல்பு சித்திக்யத்தாது. இந்நிலையை முடிந்த முடிபு எனக் கொள்பவர்கள் ஏகான்மவாதிகள். இவர்கள் கொள்கை ஏகான்மவாதம். இந்த வாதந்தான் இந்து சமய பாடத்திட்டத்தில் 3ம்பிரிவு.

பாடத்திட்டம் இந்த மூன்றும் பிரிவை, இரண்டாம் பிரிவுடன் சமத்துவ புத்தி பண்ணி, பிள்ளைகளே நீங்கள் விரும்பிய பிரிவைச் சேருங்கள் என்கிறது. எப்படி யிருக்கிறது திட்டம் இடுஞ்சூழ்ச்சி.

'தாம் பிரமங் கண்டவர் போல்
தம்மைக் கண்டு ஆங்கதுவே
நான்பிரமம் என்பவர் பால்
நண்ணுதே"

என்பது உமாபதிசிவம் அருளிய நெஞ்சுவிடுதூது.

—0—

நேயர்கள் நெஞ்சம்

# சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு நூலா?

—:0:—

சிவஞானபோதம் வடமொழிச் சிவஞானபோதத்தின் மொழிபெயர்ப்பு எனச் சிலர் கூறுவர். இவ்வாறு கொள்வதற்கு அகச் சான்றோ புறச் சான்றோ காணப்படவில்லை. "நந்தி முனி கணத்தளித்த உயர் சிவஞானபோத முரைத்தோன்" எனப் பாயிரங்கூறுகின்றது. சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு நூலெனமெய்கண்டாரோ, வழிநூல், சார்புநூல்கள் செய்தாரோ குறிப்பிடவில்லை. வடமொழிச் சிவஞான போதத்தின் 12வது சூத்திரத்தினிறுதியில் "இவ்வாறே சிவஞானபோதமென்னும்இந்நூலில் சைவாகமங்களின் பொருள் நிச்சயத்தை அறிக" எனக் காணப்படுகின்றது வடமொழிச் சிவஞானபோதம் இவ்வாறு கூறுதல் கொண்டும தமிழ்ச் சிவஞான போதத்தில் இவ்வாறு கூறப்படாமையாலும் வடமொழிச் சிவஞானபோதம் தமிழ்ச் சிவஞான போதத்தின் மொழிபெயர்ப்பென நன்கு விளங்கும்.

வடமொழிச் சிவஞானபோதம் ரௌரவஆகமத்திலுள்ளதெனச் சிவஞான முனிவர் குறிப்பிட்டுள்ளார், ரௌரவ ஆகமம் ஒன்று காணப்படவில்லை என அறிஞர் கூறுகின்றனர். தமழ் நூல்களை வடமொழியில் எழுதி வைத்துப் பின் தமிழ் நூல்கள் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை எனக் கூறும் வழக்கமும் ஒருகாலத்திலிருந்து வந்தது. திருமந்திரத்தை மொழிபெயர்த்து மந்திரமாலிகா எனப் பெயரிட்டு, மந்திர மாலிகாவிலிருந்து திருமந்திரம் மொழிபெயர்க்கப் பட்டதெனக் கூறினுருமுளர். வடமொழியிலுள்ள ஆகமங்கள் தமிழிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை என்னும் கருத்தும் இருந்து வருகிறது.

ஒரு நூலை ஒருவர் தமது அறிவு நுட்பங்களைக்கொண்டு செய்வதற்கும், ஒன்றனை மொழி பெயர்ப்பதற்குமுள்ள மதிப்பு வேறுபடும். சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு நூலாயின் அது இவ்வளவு புகழ் அடைந்திருக்க முடியாது.

சைவசித்தாந்தமாணவன்.
அடம்பன்,
ஆண்டான் குளம்,

# ஐய வினு

—0—

சிவஞான போதம் தமிழர் பண்பாட்டை விளக்குவதாக ஒரு நீண்ட கட்டுரை இப் பத்திரிகையில் வெளிவந்தது. சென்ற பத்திரிகையில் 'சிவஞான போதம்' என்று தலையங்கமிடப்பெற்றுப் பன்னிரு சூத்திர முதனூற் கருத்து வெளியாயிற்று. இதில் தமிழர் பண்பாடு எது என்பதை அறிய விரும்புகிறேன்.

வ. மு. இரத்தினேசுவரஐயர்
13-9-62.

## சிறுவர் சித்திரம் நூல்வெளியீட்டு விழா

## சன்மார்க்க சபையின் இலக்கியப் பணி

—:—

ஓவியக் கலைஞர் ஆ. தம்பித்துரை அவர்களால் எழுதப்பெற்று குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் வெளியிடப்பெற்ற "சிறுவர் சித்திரம்" என்னும் நூலின் வெளியீட்டு விழா குரும்பசிட்டியில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மகாஜனக் கல்லூரி முதல்வர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்கள் தலைமையில், புதினம் ஆசிரியர் திரு. தி. ச. வரதராசன் திரு. தேவன் யாழ்ப்பாணம், ஆகியோர் உள்பட பலர் பேசினர். திரு. கனக செந்திநாதன் நன்றியுரை கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானபோதம்

—————:0:—————

[ நவாலியூர் திரு. சோ. நடராசன் B. A. ]

முற்ருெடர்—4

உயிரின்றிப் புலன்கள் விடயங்களை அறியமாட்டா. புலன்களோடு சேர்ந்து உயிர் காணும்பொழுதுதான் புலன்களுக்கு உணர்வுண்டு புலன்கள் உயிரின் உதவியால் தத்தம் உணர்வுக்குக் கோசரமாகும் பொருள்களை உணர்கின்றன. புலன்கள் தம்மையோ, உயிரையோ உணரமாட்டா. உயிரின்றிப் புலன்களுக்குக் காட்சியில்லாமை போலவே கடவுளின் துணையின்றி உயிர் தாஞக உணரமாட்டாது. கடவுள் உயிரோடு கலந்து நின்றே அதற்குப் பொருள்களை உணரவைக்கிருர். உயிரின் அறிவு சுட்டறிவு, அது தன்னையோ கடவுளையோ அறியமாட்டாது. உயிருக்கு உணர்வையுண்டாக்குவதால் கடவுள் விகாரப்படுவாரோ என்ருல் இல்லை. காந்தத்தின் முன் இரும்பு வலித்துக்கொள்வது போலத்தான் விகாரமின்றி நின்று செயல்புரிவான்.

நாம் உலகத்துப் பொருள்களைப் புலன்களாலும், அந்தக்கரணங்களாலும் அறிகிரும். இவ்வறிவு பாச ஞானத்தாலும், பசுஞானத்தாலு முண்டாகும் சிற்றறிவு. இவ்வாறு சிற்றறிவால் அறிபவை அசத்துப் பொருளே. அதாவது உண்மையற்ற பொருள். சிற்றறிவால் அறியமுடியாதது சூனியம். இல்லாதது; கடவுளைச் சிற்றறிவால் அறியமுடியாது. அவர் அவ்வாறு அறியப்படக்கூடியவருமல்லர். அவர் முற்றறிவினுலே தான் அறிபப்படக்கூடியவர். முற்றறிவென்பது பசுஞான பாச ஞானங்களுக்கு அப்பாற்பட்ட பதிஞானம். கடவுள் மனவாசகங்கடந்த பொருளானபடியால் சிற்றறிவுக்கு எட்டாதவர். ஆனுல் பேரறிவாகிய நேர்க் காட்சியால் காணப்படுவர்; அந்தக்கரணங்களின் உதவியின்றி அனுபூதியால் உய்த்துணரப்படுபவர்.

ஒளிமுன் இருள்போல உள்பொருளான கடவுள் முன் பாசமான உலகு தோன்றி விளங்காது. அதுபோலவே மெய்ப்பொருளல்லாத உலகம் கடவுள் முன் விளங்கித் தோன்ருது. உலகைக் கடவுள் உணர்ந்திருந்தாலும், அதை அவர் சுட்டியறிய மாட்டார்,

ஏனெனில் அது அவரோடு இரண்டறச் சேர்ந்திருப்பதால்.

மாயா தத்துவங்களையும், புலன்களையும், அந்தக்கரணங்களையும் தன்னகத்துக் கொண்ட பொய்ப்பொருளான பாசம் மெய்ப்பொருளை அறியமாட்டாது ஏனெனில் அதுவும் மாயையிற் பிறந்த மெய்யுணர்வற்ற பொருளே ஆனுல் பொய்ப்பொருளை நமுணர்வு அறிந்து கொண்டதாக நினைப்பது கானல் நீரை நீரென்று மயங்கிக்கொள்வது போன்றதே. ஆனுல் உயிர் சார்ந்ததன்வண்ணமாயிருப்பதால் பொய்ப்பொருளோடு சேர்ந்து அதேயாக நின்று அதன் பொய்ம்மையை அறிகிறது. மெய்ப்பொருளோடு சேர்ந்து நின்று மெய்ப்பொருளின் தன்மையை உணர்கிறது.

இவ்வாறு சார்ந்ததன்வண்ணமாய் நிற்கும் உயிர் புலன்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 3984

கொக்குவில் கிழக்கு

1. விசுவரத்தினம்இராசதுரையும் பெண் 2. நாகரத்தினமும் வழக்காளிகள்

எதிராக

கொக்குவில் கிழக்கு சித்தன் சின்னத்தம்பி எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3984 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுக காணிகளை 1962ம் ஞு ஐப்பசி மீ 24 ம் உ புதன்கிழமை 24-10-62 முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1892-50 ம் 24-4-61 தொடக்கம் 3-11-61 வரைக்கும் ரூபா 1000 க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 202-67 ம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் இறை அம்பர் தொல்லையும் தம்பசிட்டியும் வி. பர 4ம் தென் மேற்குப் பக்கத்திலுள்ள கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழமையான வழிவாய்க்கால்பாவிப்புரிததும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை கிழக்கு ருேட்டும். வாய்க்காலும் வடக்கு செல்லப்பா பெண் கமலாட்சியினதும் சகோதரனினதும் ஆதனம். மேற்கு அப்பாப்பிள்ளை ஆசைபாவினுதனம், தெற்கு குறித்த சித்தன் சின்னத்தம்பியின் ஆதனம். இதடங்கலும் D 210/27ம் இலக்கத்திற் பதிவு செய்யப்பட்டது.

2. ஷை அம்பத்தில்லை வி. பர 3 குளி 9½ம். கல்வீடும் பயிரும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும். இந்த விலப்பரப்பு மூன்று குளி ஒன்பதரைக்கும் எல்லை கிழக்கு ருேட்டு வடக்கு சதாசிவம் பெண் ஆச்சிமுத்துவினுதனம். மேற்கு சித்தன் சின்னத்தம்பியின் ஆதனம். தெற்கு கை ஒழுங்கை. இதடங்கலும் D 180/148ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

அ வெற்றிவேலு
கொமிஷனர்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 17-9-62.
M. 113, 21-9-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, M.B, 2801

கரம்பன்

V. மாணிக்கம் கைம்பெண் யோகம்மா —வழக்காளி

எதிராக

சரவணை

1. நாகேந்திரர் அம்பலவாணர்
2. பொன்னையா ஆறுமுகம் கைம்பெண் கண்மணி
3. ஆறுமுகம் வெற்றிவேலு
4. இராசையா இலட்சுமணபிள்ளையும் பெண்
5. இலட்சுமியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 2801-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1962-ம் ஞு ஐப்பசிமீ 13-ம் உ சனிக்கிழமை (13-10-62) முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை;-முதல்வட்டி ரூபாய் 1000-ம் 28-4-59 தொடக்கம் 21-3-60 வரைக்கும் ரூபாய் 500-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 303-95 ம்.

ஆதன விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை "உப்பன்" செ. பர. 12. எல்லை கிழக்கு சுந்தரம் பெண் அன்னம்மாவினதும் மறுபேரினதும் ஆதனம். வடக்கு செல்லததுரை பெண் அன்னமுத்துவினுதனம். மேற்கு வைத்தீஸ்வரன்கோவிலாதனம். தெற்கு சோமசுந்தரம்பெண் சுந்தரத்தினுதனம். இதடங்கலும்,

C 139/242-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

2. ஷைசரவணை இறை "தரும் பச்சி வெள்ளிடையில் தெற்கு" இதில் வடக்குப்பக்கமாகவி பர. 9. எல்லை கிழக்கு ருேட்டு. வடக்கு சின்னத்தம்பி வேலுவின் உரிமைக்காரரினுதனம். மேற்கு சின்னக்குட்டி இளையப்பாவினுதனம். தெற்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்தினுனதம். இதடங்கலும். C 206/12-ம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டது,

அ வெற்றிவேலு,
கொமிஷனர்.
19. வேம்படி வீதி.
யாழ்ப்பாணம், 17-9-62.
M. 114 21-9-62.

## அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் யாழ்ப்பாணம் 230 (A) நாவலர்வீதியில் தி. நவரெத்தினம் என்னும்விலாசத்தில் அடைவுபிடிக்கும் அடைவு கடையில் 1955ம் ஞு ஐப்பசி மீ 3ம் தேதி தொடக்கம் 1958ம் ஞு மார்கழி மீ 31ம் தேதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னுல் 1962ம் ஞு ஐப்பசி மீ 13 ம் தேதி சனிககிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் ஷெ அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்,
1962ம்ஞு புரட்டாதிமீ 18ம் தேதி
வை. ஏரம்பமூர்த்தி,
ஏல விற்பனையாளர்,
Auctioneer.
M 116 21, 28-9-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கொக்குவில்

கந்தையா செல்லத்துரை —வழக்காளி

இல. M.B. 3606

எதிராக

யாழ்ப்பாணம்

வண்ணுர்பண்ணை மேற்கு

1, மூகமெட் மொய்டீன் மூகமெட் அப்துல்காதர்
2. பெண் யமீலா —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 3606-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1962-ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 13-ம் திகதி (13-10-62) சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 2405-50 ம், இதில் ரூபாய் 2000-க்கு 6-9-60 திகதி தொடக்கம் 6-6-61 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 236-14 சதம்,

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை வடமேற்கிறை "ஆல்நின்றபுங்கடி" விலப்பரப்பு 4-ம் குளி 2½-ம் ஆனுல் அளவுப்படி விலப்பரப்பு 4-ம் குளி 1¾-ம் வீடும் கிணறும் பயிர்களும், எல்லை கிழக்கு ஒழுங்கையும் ஐடுறுஸ் பள்ளிவாசலுக்குமுரிய ஆதனம், வடக்கு முகமெட் அப்துல்காதர் பெண் ஏசியா உம்மாவுக்கும் பங்காளருக்கும் சேயுசன் லெப்பை பக்கிறு மொய்டீனுக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு மொய்டீன் ஆண்டவருக்குரிய ஆதனமும் ஒழுங்கையும். தெற்கு அல்லாப்பிச்சை பெண் றகுமாதும்மாவுக்கும் மீருசை பொமகன் சின்னம்மாவின் உரிமைக்காறருக்குமுரிய ஆதனங்கள், இதில் சொரியலாய் ஐந்தில் இரண்டு பங்கு (2/5)

முற்பதிவு D 275/103.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 2-8-1962.
M 112 21-9-62

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல: M B 3821

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

பலாலிருேட்டு வண்ணுர்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம்

1. சபாபதி சின்னத்தம்பியும் பெண்
2. புவனேஸ்வரியும் வழக்காளிகள்

எதிராக

பிச்சைக்குளம் ருேட்டு வண்ணுர்பண்ணை மேற்கு

1. கச்சு முகம்மது சைனுல் ஆப்தீனும் பெண்
2. லைலாவும். —எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3821-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி இதன் கீழ் விபரிக்கப்படும் காணி 1962 ம் ஆ ஐப்பசிமீ 25 உ வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2000-ம் அதற்கு 11-5-61 தொடக்கம் 25-8-6 வரை 12 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 25-8-61 தொடக்கம் இறுபடும்வரை 5 வீத வட்டியும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை இறை "ஒடைப்புளியடி" நீ. பர. 1 குளி 7½ "ஒடைப்புளியடி குளி 9. இருவகையுங் கூடிய நீ பர 1 குளி 16½ யும் வீடும் கிணறும் அதற்குள்ளிருக்கும் பயிர்வகைகளும் இந்த நீ பர ஒன்று குளி பதினறரைக்கும் எல்லை கிழக்கு அசன் மரைக்கார் மீரா முகிதீனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு முகம்மது மொகிதீன் கைம்பெண் பாத்துமா உம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு மாதர் சாகிப் பெண் முகம்மது சுலைகா உம்மாவினுதனம். தெற்கு முகம்மது மீராசாகிப் சுபைதாவினுதனமும் ருேட்டும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
45, 4-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 17-9-62
M 111 21-9-62.

## சமய தீட்சை

அளவெட்டி அருணேதயக் கல்லூரி சைவ மாணவர் கழக ஆதரவில், சுபகிருதுஞு ஆவணிமீ 31-ந்உ (16-9-62) ஞாயிற்றுக்கிழமை ஷெ கல்லூரி மாணவர்களுள் 70 பேரும், பெற்ருேர்களில் 9 பேருமாக மொத்தம் 79 பேர் சமய தீட்சை பெற்றுக் கொண்டனர். தீட்சா குருவாக வேதாரணியத்து எஸ். சங்கரக்குருக்கள் அவர்கள் அமர்த்தப்பட்டனர்.

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணை மேற்கு க. செ. த. செ. செல்லையா பிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1-4-60 முதல் 31-3-61 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 17-10-62 புதன்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட நகைகள் பிறநீங்கலாக மிகுதி ஷெ கடையில் பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

C. Ragunathan
Auctioneer.
M 115 21, 28-9-62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

சுண்டிக்குளி யாழ்ப்பாணம் சின்னத்தம்பி மரியாம்பிள்ளை இம்மானுவேல் பெண் மரியமுத்து —வழக்காளி.

இல. M.B. 2790

எதிராக

1. சுண்டிக்குளி யாழ்ப்பாணம் சின்னத்தம்பி நாகமணி
2, ஷெயூர் பெண் பவளம்
3, ஷெயூர் சின்னத்தம்பி மரியாம்பிள்ளை இம்மானுவேல் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B, 2790-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒருதுண்டுக்காணி 1962ஞு ஐப்பசிமீ 24உ புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா. 5367-ம், ரூபா 4500-க்கு 17-4-59 தொடக்கம் 25-7-1960 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 439-10. தீர்வைத்தொகையில் ரூபா 2050-ம் கோட்டுச் செலவில் ரூபா 300-ம் கொடுபட்டது.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூர் இறை "பேயன் வயலும் தலைமடையும்" பர. செ. இல. மூன்று குளி ஆறரை (பர. செ. இல. 3 குளி 6½)யும் அதற்குரியவைகளும், எல்லை கிழக்கு ஞானப்பிரகாசத்திற்கும் பெண் மரியம்மாவுக்குமுரியவாதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு வேலன் மடுத்தீசுவிற்கும் பெண் திரைசிக்குமுரியவாதனம். தெற்கு கேணி இதடங்கலும் அதற்குரியவைகளும், இதன் பதிவு D 267/1.

காரைநகர்:
1962-ம்ஞு ஆவணிமீ 16-ம்உ
வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
M. 117 21-9-62

நல்லைக்கீர்த்தனம் — 15.

## யார்எனைக் காத்திடுவார்?

★

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : கரகரப்ரியா : தாளம் : ஆதி

பல்லவி

பார்வதி பாலகனே கூர்வடி வேலவனே
யார்எனைக் காத்திடுவார் பார்தனில் நீதுணையே.

அநுபல்லவி

சீர்வளர்ந் தோங்குநல்லை ஊர்தனில் வாழ்பவனே
தார்கடம் புமணியும் மார்பனே ஷண்முகனே.

சரணம்

ஞானக்கு ருபரனே தீனர்க்க ருள்பவனே
கானக்கு றமகளின் மோனச்ச ரவணனே
தேனமுதத் தமிழில் கானம் மகிழ்பவனே
வானத்தவர் துதிக்கும் தானத்த யாபரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


இவ்வாரம் (23-9-62— 29-9-62)

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தடைகளைத் தாண்டிவிட உம்மால் முடியும். புதிய முயற்சிகள் கல்விலைவைக் கொண்டுவரும். ஆனல் தாயாரின் உடல் நிலை ஊறுபடும்,

இடபராசி கார்த்திகை 2, 3. -ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

சில காலத்திற்குக் குடும்ப விவகாரங்கள் திருப்திகரமாயிருக்காது. தந்தைவழி உறவினர் சண்டைக்கு வருவர். அயலவரும் அந்நியரும் மிக உதவியாயிருப்பார். சிறு உடல்நிலைக் கோளாறுகளுக்கு இடமுண்டு.

மிதுனராசி மிருகசீரிடம், 3 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

சண்டைகளைக் கட்டிக்கொள்வதில் முந்திநிற்பீர். கண்ணேய்க்கும் இடமுண்டு. ஆனல் தொழிலளவில் நல்ல வாரம். கல்வி ஈடுபாடுகளில் வெற்றியும் ஏற்படும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

உமது விவகாரங்களில் உமது எண்ணப்படி நடந்துகொள்வது கடினமாக இருக்கக்காண்பீர். புதிய முயற்சிகள் தடங்கல்படும் உடல்நிலை ஊறுபடும். இக்கட்டிலிருந்து நண்பர்கள் காப்பாற்றுவர்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

புதிய முயற்சிகளில் வெற்றி உண்டாம். பண இலாபங்களும் ஏற்படும். தம்பி தங்கைகள் உதவிகரமாயிருப்பர். எதிர்பாராத நற்செய்தி கிடைப்பதும் நிச்சயம்.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணமளவில் ஒரு நல்ல வாரம். புதிய முயற்சிகள் தடங்கல்படும்- ஆனல் வெற்றிபெறும். எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம், ஆனல் மன நிம்மதி இருக்காது சிறு உடல்நிலைக் குழப்பங்கள் ஏற்படும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம். புதிய முயற்சிகளில் வெற்றியும் ஏற்படும். நண்பர்கள் மிக உதவுவர், ஆனல் இனத்தவருடன் சச்சரவுகள் ஏற்படும், உடல்நிலைக் கோளாறுகளுக்கும் இடமுண்டு,

விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

உடல்நிலை போதியளவுதிருப்திகரமாயிருக்காது. தந்தையாரின் உறவினர் தொல்லைகள் உண்டு பண்ணுவார்கள். தொழிலளவில் ஓரளவில் நல்ல வாரம், விவசாய ஈடுபாடுகளில் வெற்றியும் உண்டாம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

அலுவலகத்தில் சச்சரவுகள் உண்டாம். உமக்கு நெருங்கியவர்களிடமிருந்தும் அன்புககுரியவர்களிடமிருந்தும் நீர் பிரியவேண்டி வரும். வரும் சில நாட்களுக்கு விபத்துக்கள்பற்றி எச்சரிக்கையாக நடந்துகொள்க. தொழிலளவில் ஓளவு நல்ல வாரம், ஞாயிறும் திங்களும் செவ்வாய் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

குடும்பநிலை போதியவரை திருப்திகரமாயிருக்காது. செவ்வாய் மாலையும், புதன் வியாழனும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

இவ்வாரத்தின் முதற்பாதிப் பகுதி தொழில் ஈடுபாடுகளுக்கு ஏற்றதாயிருக்கும், பண இலாபங்களும் உண்டாம். ஆனல் கடைசி இருநாட்களும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

சில காலத்திற்கு, உடல்நிலை தொடர்ந்து திருப்தியற்றதாகவே இருக்கும். வயிற்றுக்கோளாறுகளுக்கு இடமுண்டு. தொழில் வெற்றி நிச்சயம். அயலவரும் அந்நியரும் உதவியாக இருப்பர்.

## சிவஞானபோதம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கள், அந்தக்கரணங்களென்பவற்ருேடு உலக அனுபவங்களில் அமிழ்ந்திருக்கும் போது, பொய்ப்பொருளோடு சேர்ந்துநின்று அதன் பொய்ம்மையை அறிகிறது. ஆனல் தன்னையோ, கடவுளையோ அறிவதில்லை. ஆனல் கடவுள் குருவடிவாய்வந்து உபதேசஞ் செய்ய, உலகம் மாயையின் காரியமாகிய பொய்ப்பொருள என்பதை அறிகிறது. அறிந்ததும் அந்தப் பொய்ம்மையை விட்டு நீங்கித்தான் கடவுளோடு ஒன்ருயுள்ளவன் என்ற ஞானத்தைப் பெறுகிறது.

இந்த ஞானம், சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று படியில் நின்று முதிர்ந்தவர்களுக்குண்டாகும். மும்மலமும உடைய சகலர்க்குக் கடவுள் மானுட வடிவில் வந்து அருள்புரிவார்.

—தொடரும்

நேயர்கள் நெஞ்சம்

## சுயராச்சியம் பெற்றபின் போதும் பட்ட இன்னல்

### வேண்டும் உணவு, உடை, வீடு-

உலகிலுள்ள மக்களுள் இலங்கைத்தமிழர்போல் துர்அதிட்டமுள்ளவர்கள் எவருமில்லை. பொருளாதார நிலையிலோ, அரசியல் துறையிலோ, உத்தியோக முறையிலோ, உண்மையான-தீர்க்கதர்சிகளான அரசியல் தலைவர்களில்லாவிதத்திலோ, எல்லாவிதத்திலும் அல்லோல கல்லோலப்பட்டு, செய்வதின்னதென்றறியாது திகைத்து நிற்பவர்கள் இலங்கைத் தமிழர்கள். பொருளாதார நிலையைப் பார்த்தால், இயற்கை, தமிழருக்கு மிகவும் மாறு. நீர்வளம் - நிலவளம் இல்லை. மிகவும் கஷ்டப்பட்டு விவசாயம் செய்தால் பாடுபட்டதற்கும், செலவிற்கும் வருவாயில்லை. கைத்தொழில் யாதுமில்லை. இலங்கைத் தமிழர்கட்குமலாயாவிலிருந்து வந்துகுவிந்தபணம்இப்போது வருவதில்லை. மலையாளத்திற்குப் புகையிலை அனுப்பிவந்த பணம்இப்போதுவருவதில்லை இலங்கையை வெள்ளையர் அரசுபுரியும் நாளில் தமிழர்கள் கூடிய தொகையினராய் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார்கள். இப்போது சிங்கள இராச்சியத்தில் தமிழர்கள் குறைக்கப்பட்டனர், சிங்களம் படியாவிட்டால் எங்கள் பிள்ளைகளுக்கு உத்தியோகமில்லை; படித்தாலும் இல்லை. தமிழர்கள், சிங்கள அரசாங்கத்தை இனிமேல் நம்பிவாழ முடியாது. தன் கையே தனக்குதவி. இனி வேண்டும் உணவு, உடை, வீடு. இதற்கு ஆவன செய்ய வேண்டும். நாமும் சுகமாய் வாழவேண்டும், எங்கள் பின் சந்ததியாரும் அப்படியே வாழ வேண்டும். எங்கள் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் கஷ்டமில்லாமல் வாழவும் — எங்களைத் திட்டாமலும் — குறைகூருமலும், நாம் ஆக்கவேலை செய்து, உணவு, உடை, வீடு பெற வேண்டும் — இப்போ வேண்டியது இம்மூன்றும். எங்கள் பிறப்புரிமை வலியவரும. மற்ற மற்றத் தேசத்தவர்கள் எப்படித் தங்கள் தங்கள் உரிமைகளைப்பெற்ருர்களென்பதைச் சரித்திரங்கூறும். நாமும் இப்போது பெறக் கூடியதைப்பெறலாம். பின்னரும் பெறலாம. உயிரைக் காப்பாற்றவும் - மானத்தைக் காப்பாற்றவும், சுகமாயிருந்து வாழவும், மேற்சொல்லப்பட்ட மூன்றும் வேண்டும். இவ்விஷயத்தைத் தமிழ் மக்களும், தமிழ்த்தலைவர்களும் உணர்வார்களாக; உணர்ந்து ஆவன செய்வார்களாக.

வாழ்க தமிழினம்!

நா. சேனுதிராசா,
யாழ்-கமக்காரர் சங்கத்தலைவர்.
சுழிபுரம்.

## வேலும் வில்லும்

1-ம் பககத் தொடர்ச்சி

பெயர்களாகிய கருமான், செம்மன் முதலியவற்றை முருகப்பெருமானேடு இணைத்துள்ள சதுரப்பாடு உள்ளத்தைக் கவர்கின்றது. "கருமான் என்பவன் இரும்படிக்கும் கொல்லன். அவனுக்கு எப்படி முருகன் மருகனுவான்?என்று திகைக்கின்ருேம். அப்போது கற்ற கல்விவந்து கைகூடுகின்றது, கருமான், மருகன் என்ற தொடர்மொழியைக் கருமால், மருகன் என்று பிரித்துவிட்டால் எல்லையற்ற இன்பம் பிறக்கும். கருமால் என்பது திருமாலே. அவன் மருகனே முருகன் என்று ஆனந்தம் அடைகின்ருேம்.

இன்னும் ஓரிடத்தில் கருமானை அடுத்துச் செம்மான் வருகின்ருன். கருமானின் பின்பு செம்மான் வருவது சிறந்த அலங்காரம்.

இவ்வாறு நயம் நிறைந்த கருத்துக்களைப் பேராசிரியர் அள்ளித்தருகின்ருர்.

இன்னும் இராமாயணத்தையும் — கந்தபுராணக் கவியமுதத்தையும ஒப்பிட்டு நோக்கி அதில் வரும கதாபாத்திரங்களை ஒன்ருக இணைத்து அவர்களின் தன்மைகளை எடுத்துக்கூறிய ஆற்றல் பேராசிரியரைச் சார்ந்தாகும்.

| கந்தபுராணம்:- | இராமாயணம்:– |
|---|---|
| 1. விரமகேந்திரம். | இலங்கைமாநகரம். |
| 2. வேல். | வில். |
| 3. அசமுகி. | சூர்ப்பனகை. |
| 4. கையறுபட்ட தங்கை. | மூக்கறுபட்ட தங்கை. |
| 5. வானவர் சிறைவாசம். | சீதை சிறைவாசம். |
| 6. சூரன் சபை. | இராவணன் சபை. |
| 7. மகேந்திரப்போர். | இலங்கைப்போர். |
| 8. பானுகோபன் போர். | இந்திரசித்துப்போர். |
| 9. சூரன் இறுதிப்போர். | இராவணன் இறுதிப்போர். |

இவ்வாறு ஒற்றுமை நோக்கி வசன வடிவிலும்—செய்யுள் வடிவிலும் விளக்கம் தருகின்ருர் பேராசிரியர்.

முருகன் கோலமாமயில் மீது குலாவும் அழகினை, சூரன் வாயிலாகச் சூரனின் இறுதிப்போரில் கச்சியப்பர் பாடிய "கோலமாமஞ்சை" என்னும் செய்யுள் மூலமாக விளக்குகின்ருர்.

இதுமாதிரியாகவே இராமாயணத்தில் இராவணன் இறுதிப்போரில், இராமனைக் கண்ட இராவணன் அகந்தை நீங்கி இராமன் யாரோ என எண்ணுகின்ருன்.

ஆகவே ஒற்றுமை நோக்கிப் படைக்கப்பட்ட "வேலும் வில்லும்" பற்றிப் பேராசிரியர் கூறியவைகளைத் தமிழ் உலகு என்றும் வரவேற்கும்.

தேவன் அருள் சேர்க்கும்

## சீவகாருணியம்

முற்றுேடர்—6

இனி இன்றையோர் விவாகம் முதலிய சடங்குகளில் பந்தல்களை அலங்கரித்தும். ஆடல் பாடல்களை நிகழ்த்தியும், பலவகைத் தின்பண்டங்களை உண்டாக்கியும், பசித்த ஏழைகளுக்கு உதவி செய்யாமல் தம்வழி இருக்கின்றனர். அதே நேரத்தில் உற்ருருக்கு ஆபத்து நேரிடும் போது அதைத் தடை செய்ய ஆடல் பாடல்களால் முடியவில்லை. அந்த நேரத்தில் பசித்தவர்களுக்கு உணவு கொடுத்துப் பசியை நீக்கினல், அந்தப் புண்ணியம் கட்டாயம் அந்த ஆபத்தைத் தடை செய்யும்என்பது உண்மை. நோயினலும் வேறுகுறைகளினலும் வருந்துவோர் தம் தரத்திற்கேற்றபடி உணவு அளிப்பார்களேயானல், அச்சீவகாருணியம் அவர்கள் விரும்பியதை அளிக்கும், சீவகாருணியமுடையோரை எந்தத் துன்பமும் வருத்தாது. துஷ்ட பிராணிகளாலோ, துஷ்ட சீவன்களாலோ, துன்பம் கிட்டாது எனவே இந்த விரதமானது தேவர்கள், மனிதர்கள், தபசிகள், ஆண், பெண், ஞானிகள் முதலிய எல்லோராலும் செய்யத்தக்கது. இவ்விஷயத்தில் யாரை யார் மறித்தாலும், பொருட்படுத்தாது அவர்கள் அளித்தால் அவரவர் செய்த நன்மை அவரவர்களையே சேரும், பசித்தவனுண்ணும்போது காணுண்பதாகவே நினைத்துக் களிக்கின்ற அப் புண்ணியவான் ஞானியாக விளங்குகிருன். தெய்வத்திற் கொப்பாகக் கொள்ளப் படுகிருன்.

சீவகாருணிய ஒழுக்கமுடையவராகிச் சீவன்களைப் பசி, அபாயத்தினின்றும் நீக்கச் செய்வோர் எச்சாதியராயினும், எச்சமயத்தவராயினும், எச்செய்கையுடையவராயினும் தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கத் தக்கவர்களாவர். எனவே நாமும் சீவகாருணியவழி நடந்து, அதன் மூலம் மோட்சப் பேரின்பக் கதவைத் திறந்து, நெடுங்காலம் அந்த முத்தியின் பத்திலாழ்ந்திருப்போமாக.

சிவஸ்ரீ.
இ. ஞானசேகரக்குருக்கள்,

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் ஸ்ரீ. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் ... வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவபிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org